Judicial Form No. 53
(See Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 504/2022 Date: 14.11.2025
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | Village | க.புதுப்பட்டி |
| Father/ Husband Name | சின்னத்தம்பி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 60/2025 | Calling | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 14.11.2025 TIME 12.00 **PM**

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது க.புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் அனைவரும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 5 வருடத்திற்கு முன்பு எனது வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு நான், நாகேந்திரன், ராஜா, சேகர் ஆகியோர் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நாங்கள் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நாகேந்திரனும், சேகரும் தற்போது இறந்துவிட்டார்கள். நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்றபோது காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ.1** ஆகும். புகாரில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.12.2019ம் தேதி 14.45 மணிக்கு நான், நாகேந்திரன், ராஜா, சேகர் ஆகியோர் எனது வீட்டின் முன்பு இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் என்னையும், ராஜாவையும், அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கம்பால் அடித்து, கொலைமிரட்டல் செய்தார்கள் என்றும், புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.